திரு. கோவைத்தம்பி: தமிழகம் முழுவதும் போவதற்கு சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இலவச பாஸ் வழங்கப்பட்டிருக்கிறது. டிக்கட் இல்லாமல் போகிறவர்களைப் பரிசோதனை செய்ய எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் இலவசமாக, சம்பளம் இல்லாமல் செக்கிங் இன்ஸ்பெக்டர்களாகப் பணியாற்ற அரசு அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இங்கேயே இரண்டு கருத்துக்கள் நிலவுகின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் என்றால் பொதுமக்களுக்கு இருக்கின்ற குறைகளை அறிந்து அரசாங்க அதிகாரிகளிடமும், அரசாங்கத்திடமும் எடுத்துச் சொல்ல வேண்டும். ஆகவே, புதிதாக அப்படிப்பட்ட சட்டம் போட்டு உரிமை வழங்க வேண்டிய அவசியமில்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: பேரவை நாயகர் அவர்களே, டிக்கட் எடுத்தவர்கள், எடுக்காதவர்கள் என்றபேதம் இல்லாமல் சமதர்ம நோக்கோடு விண்ணுலகப் பிரயாணம் செய்வதற்கு அல்லது இயற்கை எய்தும் வகையில் பயணம் செய்வதற்கு கடந்த ஆறு மாத காலத்தில் பல்லவன் எத்தனை பேருக்கு உதவி செய்திருக்கிறான்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி டிக்கட் இல்லாமல் பயணம் செய்பவர்களைப் பற்றியது. விண்ணுலகத்திற்குப் போகிறவர்களுக்கு டிக்கட் கிடையாது. ஆகவே, பிரச்சினை இல்லை.

வினாக்கள் - விடைகள் முடிவுற்றன.

2. ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) உறுப்பினர் திரு. வெ. இராஜசேகரன் கைது செய்யப்பெற்ற செய்தி.

திரு. ப. பொன்னுரங்கம்: பாயிண்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சனிக்கிழமையன்று சட்டமன்ற உறுப்பினர் திரு. வெ. இராஜசேகரன் அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஏதோ சர்ச்சையினால் கைது செய்யப்பட்டு இதுவரை எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லை.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1980 சூலை 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கைதாகி விடுதலை யாகிவிட்டதாக பத்திரிகையிலே செய்தி வந்துவிட்டது. அவர் ராதாகிருஷ்ணன் நகரில் இருக்கிறார் என்று நினைக்கிறேன். அது முடிந்து இரண்டு நாட்களாகி விட்டன. அதிலே பிரச்சினை யில்லை.

திரு. ப. பொன்னுரங்கம்: சபைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். எனக்குக் கிடைத்த தகவல் அவர் இன்னும் வடுதலை செய்யப்படவில்லை; எங்கிருக்கிறார் என்றே தெரியவில்லை என்பதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விடுதலையாகி விட்டார் என்பதாக எனக்குக் கிடைத்த தகவலை நான் சொல்லி விட்டேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: அதைப்பற்றி தாங்கள் மன்ற உறுப்பினர்களுக்குச் சொல்லியாக வேண்டும், எனக்குக் கிடைத்த தகவலின்படி அவர் பெயிலிலும் இல்லை. அப்பீலும செய்யவில்லை, எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லை என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்ற பேரவை விதி 316இல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்—

> ''எனினும், ஒரு உறுப்பினர் பிணையில் அல்லது மேல் முறையீடு காரணமாக விடுவிக்கப்பெற்றுள்ளதான தகவல், அந்த உறுப்பினர் கைது செய்யப் பெற்ற செய்தியை பேரவைக்கு அறிவிக்கும் முன்பே கிடைக்கப் பெறின், அவர் கைதான செய்தியையும், அல்லது பின்னால் விடுவிக்கப் பெற்ற செய்தியையும் பேரவைத் தலைவர் பேரவைக்கு தெரிவிக்காமல் இருக்கலாம்.''

என்று தான் இருக்கிறது. அவர் விடுதலையரகி விட்டார். இப்போது பிரச்சினையில்லை, அது முடிந்துவிட்டது.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, விடுதலை செய்யப்பட்டுவிட்டார் எனறு தாங்கள் சொல்வதை நாங்கள் செய்தியாகத்தான் தெரிந்து கொள்கிறோம். அவர் கைது செய்யப்பட்டார் என்ற செய்தி உறுப்பினர்களுக்குத் தெரிந்து இருக்கிற காரணத்தால் விடுதலை செய்யப்பட்ட சூழ்நிலையில் அதை தாங்கள் தெரிவிக்க வேண்டியது கட்டாயமாக இல்லை என்றாலும் தெரிவித்தால் அவையிலே உள்ளவர்களுக்கு நிறைவு தரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க் கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன், அது பத்திரிகையிலே வந்துவிட்டது அதைப்பற்றி அவைக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை என்று விதி தெளிவாக இருக்கிறது.